[வலைப்பின்னல் மாற்று முறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந் தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்

---

*(1999, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 5.25** **தபாற் செலவு: ரூபா 3.50**

## 1999 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந் தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்

[1999 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ 48/98.

## 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந் தாங்கிய படைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய திட்ட (ஆயுதந் தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டபடலாம்

1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2**. 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந் தாங்கிய படைகள்) சட்டத்தின் 3அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது 3ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்

"ஒய்வூதியத் திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவதற்கான காலவரையறையை நீடித்தல்.

**3ஆ**. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டு செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவராக வந்தவரும் அத்துடன் -

(அ) அந்தத் திகதியின் பின்னர் அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்திருக்கும் அல்லது தொடர்ந்திருக்கின்றவரும் ; அத்துடன்

(ஆ) ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு 3ஆம் பிரிவின்கீழ் அல்லது 3அ என்னும் பிரிவின் கீழ், விருப்புத் தெரிவித்திருக்காத வருமான,

ஆளெவரும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய திகதிக்கு முன்னர்

ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவதற்கு விருப்புத் தெரிவிக்கலாம்

ஆயினும், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் இப்பிரிவு வலுவுக்கு வருவதற்கு முன்னர் இறந்திருக்குமிடத்து அல்லது இவ்வுட்பிரிவின் கீழ் விருப்புத் தெரிவு ஒன்றைச் செய்யாது இவ்வுட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இறக்குமிடத்து, அத்தகைய ஆள், அவர் ஒரு மனைவி அல்லது பிள்ளையை அல்லது ஒரு மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுச் சென்றிருப்பின் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு விருப்புத் தெரிவித்துள்ளாரெனக் கருதப்படல் வேண்டும்.

(2) ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் விருப்பம் தெரிவித்துள்ள ஆள் ஒவ்வொருவரும் அல்லது ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவதற்கு விருப்புத் தெரிவித்துள்ளாரென இவ்வுட்பிரிவின்கீழ் கருதப்படுகின்ற ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய இறந்த ஆளின் அலுவல்களை நிர்வகிக்கும் ஆள், 1968 ஒற்றோபர் 1 ஆம் திகதி தொடங்கி விடயத்திற்கேற்றவாறு இளைப்பாறும் திகதியில் அல்லது இறக்கும் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கான உதவுதொகைகளின் எல்லா நிலுவைகளையும் அதன் மீது ஆண்டொன்றுக்கு நான்கு சதவீதப்படி வட்டியுடன் சேர்த்து ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

*(3)* முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஒரு விருப்புத் தெரிவானது முடிவானதாகவிருத்தல் வேண்டும்.

*(4)* இப்பிரிவின் ஏற்பாடுகள், *3* ஆல்லது *3*அ என்னும் பிரிவுகளுக்கு முரணாக எது எவ் வாறிருப்பினும், பயனுறுவதாதல் வேண்டும்

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் , இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*